தவறான வழியில் செலவிட்டுவிட்ட காரணத்தினால் அடுத்த தவணை வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்தான் அது. ஒருவர் இருவர் செய்கிற தவறு பெரும் சிக்கலை அளித்துவிடுகிறது. கடன் கொடுக்கின்ற முறையில் சிக்கல் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அகதிகளாக வந்துள்ள பர்மா தமிழர்கள் அத்தனைபேர்களுக்கும்—வீடுகள் இல்லை என்று மனுக்கள் போட்டவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுவிட்டதா? அவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி வேண்டும்.

அரிசனக் காலனிகளுக்கு மேல்நிலைக் குடிநீர் தொட்டிகள்

*** 215. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியத்தில் உள்ள பாலவாக்கம் அரிசனக் காலனி, வெண்கல் குப்பம் அரிசனக் காலனி, தாமரைப்பாக்கம் அரிசனக் காலனி, மாகரல் அரிசனக் காலனி ஆகியவற்றில் மேல்நிலைக் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாலவாக்கம் மற்றும் 3 அரிசனக் காலனிகளுக்கு மட்டுமல்லாமல் இந்த வசதி தேவையுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள இதர அரிசனக் காலனிகளுக்கும் வசதி அளிப்பதுபற்றி பரிசீலித்து நிதி நிலைமைக்கு உட்பட்டு சீரான திட்டமிட்ட முறையில் அரசு செயல்படுத்தும்.

திரு. கா. வேழவேந்தன் : செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள ஹரிஜனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுவது பின்னால் வருவதாக இருந்தாலும், உடனடியாகக் குடிநீர் வசதியற்ற இந்த நான்கு ஹரிஜன காலனிகளுக்காவது குடிநீர் வழங்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பாலவாக்கம், வெண்கல்குப்பம் தாமரைப்பாக்கம், மாகரல் ஆகிய இடங்களில் உள்ள அரிசனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்க—பொதுவாக இந்தத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் 1 லட்சம் கேட்டிருக்கிறார். அதைக் கொடுக்கக்கூடிய நிலைமை வரும்போது இவற்றில் உடனடியாக 3 கிராமங்களையாவது எடுத்துக் கொள்வது பரிசீலிக்கப்படும்.